பார்வதி. பாட்டு

"கையில் ஒரு காசுமில்லை. ஐயா
கடன் கொடுப்பார் ஒருவரில்லை
நாடிழந்து நகரிழந்து. ஐயா
→ நான் ஆண்ட மனையிழந்து.
பாவியாக வந்திட்டேனே
மாபாவி என்ன செய்வேன்
கையில் ஒரு காசுமில்லை. எனக்கு
கடன் கொடுப்பார் ஒருவரில்லை
பொன்னிழந்து புகழ் இழந்து
பூமிபதி நாணிழந்து. ஐயா
மண் இழந்து வந்திட்டேனே
மாபாவி என்ன செய்வேன்
கையில் ஒரு காசுமில்லை ஐயா
கடன் கொடுப்பார் ஒருவரில்லை"

---

பார்வதி. அய்யா, மண்ணுடையாரே! நான், ஏழை! என்னிடம் ஒரு காசுமில்லை, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், ஏதோ காசுச் சொம்பு செய்து கொடுங்கள், ஐயா!' ) 288

289 மண்ணுடையான். பெண்ணே! பேசாமல், போ! எங்களுக்கு வேலை அதிகம், இப்போது நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது! காசு இருந்தால், கொடுத்து,

ஒரு சட்டி வாங்கிக் கொண்டு, போ! இல்லா
விட்டால், பேசாமல், போய் விடு! என்றார்கள்,
மண்ணுடையார்கள்.

பார்வதியாள் மண்ணுடையார் சொன்னதைக் கேட்டு, கோபம் வந்து, பிள்ளையார் கோவிலுக்கு சென்று, தெய்வசபையை நினைத்து, மாயவரை நினைத்து, மாயவா! நான், தெய்வ சபையில் பிறந்தது, உண்மையானால்! ஊசிபோல் மின்னல் மின்னி, பாசிபோல் காலிறங்கி, பெரிய மழை பெய்து, மண்ணுடையான் செய்து வைத்திருக்கும், உருவங்கள், மண் சட்டிகள், இவைகளையெல்லாம் நீராகக் கரைய வேண்டும், காந்தி நாதா! என்று பார்வதியாள், மாயவரை நினைத்து அழுகும் போது,

உடனே வானத்தில், கருமேகம் நிறைந்து, பேரிடியுடன், பெரிய, மழை பெய்தது. சிறிது நேரத்தில், மண்ணுடையார்கள் செய்து வைத்திருந்த மண் பாத்திரங்களும், யானை, குதிரை, உருவங்கள் எல்லாம் நீராக கரைந்து போய் விட்டது.

மண் பாண்டங்களெல்லாம் அழிந்து போனது கண்டு, மண்ணுடையார் மனம் கலங்கி,

பாட்டு

"அய்ய நல்லோ அய்யோ தெய்வமென்று
மண்ணுடையான் அழுது நல்லோ
அழுது புலம்புறானே
ஏங்கியில்லா நாட்டுக்கு ஐயோ நாட்டுக்கு
ஏங்கி வந்து நேர்ந்திட்டுதே
அய்யோ நேர்ந்திட்டுதே"

---

மண்ணுடையார், "ஐயோ, இவனே! அச்சமில்லா நாட்டுக்கு, அச்சம் வந்து நேர்ந்திட்டுதே.

அய்யோ! யாரோ, ஒரு பெண் வந்து, நம்மைக் காரகச் சொம்பு செய்து கொடுக்கச் சொன்னாள், நாம் மாட்டேன் என்று சொல்லி விட்டோம், இது அவளுடைய சாபமாகத்தான் இருக்குமென்று மண்ணுடையார் நாலு பேரும், பார்வதியாளைத் தேடிக் கொண்டு வரும் போது, பர்வதியாள் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, நாலு பேரும்.

பாட்டு

"ஆட்டம் நல்லோ ஆட்டம் பணியுறீரோ
அங்கு பணியுறீரோ
ஆளடிமை பத்தினிக்கு செய்யுறீரோ
அங்கு செய்யுறீரோ
பாதம் நல்லோ பாதம் பணியுறீரோ
அங்கு பணியுறீரோ

664, முன்பக்க பாட்டு

பணிவிடைகள் பத்தினிக்கு செய்யுறீரோ
அங்கு செய்யுறீரோ"

---

சுற்றிவலம் வந்து சூரியனை தெண்டனிட்டார்.
பக்கம் வலம் வந்து, பகவானை கை முகைந்தார்.

மண்ணுடையார்: 'ஆத்தா! தாங்கள், பார்வதியா/பத்தினியென்று எங்களுக்குத் தெரியாது, யாரோ/என்று நினைத்து, அப்படிச் சொல்லிவிட்டோம், எங்களுடைய அளவில்லாத, மண்பாண்டங்கள், உருவங்கள் எல்லாம் மழை பெய்து நீராக கரைந்து விட்டது! நாங்கள் செய்த குற்றத்தை, மன்னிக்க வேண்டும், தாயே!' என்றதும், ) 289

290 பார்வதி: 'அப்பா, மண்ணுடையார்களே! மழை பெய்து கரைந்து போனதற்கு, நான், என்ன, செய்வேன்?',

மண்ணுடையார்: 'ஆத்தா! தாங்கள் நினைத்தால், என்ன வேண்டுமானாலும், செய்ய முடியும்! எங்களுடைய மண்பாண்டங்களும், உருவங்களும், முன் இருந்தது போல், அருள் செய்ய வேண்டும்! தாங்கள் கேட்டது போல், ஏழு கரகச் சொம்பு, உடனே செய்து தருகிறேன்.' என்று உடையார்கள் அழுகும் போது, பார்வதியா மனமிரங்கி வடக்கு முகமாக நின்று, தெய்வ சபையை நினைத்து,

665.

பார்வதியா. ஆபத் சாந்தவா! அனுகரக்ஷகா!
பரந்தாமா! ஆபாலகா! இந்த மண்ணுடை
யானுடை மண் பாண்டங்களும், யானை, குதிரை
உருவங்களும், முன் இருந்தது போல்,
இப்போது மண்ணாக கிடக்கும், அத்தனையும்
பழையபடி உருப்பெற வேண்டும், காஞ்சி நாதா!
என்று மாயவனை நினைக்கும் போது, மண்பாண்
டங்களும், சிற்பங்களும், அப்படியே உருப்
பெற்று நின்றது. மண்ணுடையார்கள் சந்தோச
மடைந்து, பார்வதியாளை வீட்டுக்கு அழைத்து
சென்று, ஏழுகரகச் சொப்புகள் செய்து கொடு
த்து, அனுப்பிவைத்தார்கள்.

பார்வதியா சொப்புகளை வாங்கிக் கொண்டு புறப்
பட்டாள்.

பாட்டு

"வீரப்பூர் தாண்டியல்லோ தாண்டியல்லோ
பத்தினியா வழி நடந்தாள் வழிநடந்தாள்
காடான காடுவிட்டு காடுவிட்டு
கட்டப்பொள்ளி சோலை தாண்டி வருகிறாளே
நாகமலை தேடியல்லோ தேடியல்லோ
நாயகியும் வருகிறாளே வருகிறாளே"

பருவதியா நாகமலை அருக்கண்டி மாதா தவசு
நிலை, வந்து, சேர்ந்தாள்.

666,

அருக்காணி மாதா: அம்மா, பார்வதியா! காரகச் சொப்பு, வாங்கி வந்தாயா?

பார்வதி: அப்படியே, வாங்கிவந்தேன் மாதாவே!

அருக்காணி: சரி! உனக்கு, என்ன ~~[illegible]~~ வேண்டும், சொல்?

பார்வதி: ஆத்தா! எனக்கு, சாதம், தண்ணீர், ஏலம், இளநீர்; இவையெல்லாம் ஏழுகாரகத்திலும், வேண்டும் தாயே!

அருக்காணி: சரி, அப்படியே! ஏழுகாரகத்திலும் இருவப்படுத்துகிறேன்! மேலும், உன் அண்ணன் மார்கள் இருந்த இடம், உனக்கு தெரியாது! நான், என்னுடைய கல்வாணியை, ~~கொண்டு போய், அங்கு விட்டு விடுகிறேன்~~ அனுப்பி, உன் அண்ணமார்கள், பன்றிகுத்திய இடத்தில் கொண்டுபோய் விடச் சொல்கிறேன், அங்கிருந்து, உன் அண்ணரைத் தேடிச் செல்! என்று, சொல்லி கல்வாணிப் பக்ஷியை அழைத்து, இந்தப் பெண்ணை எடுத்து, பொன் இறகால் போர்த்தி, இவள் அண்ணமார்கள், பன்றிகுத்திய இடத்தில் விட்டு, வா!

கல்வாணி: தாயே, நல்லது! என்று, பார்வதியாளை நடுமுதுகில் வைத்து, பொன் இறகால் போர்த்தி கல்வாணி அறப்பட்டது.) 290

667 

(பாட்டு

"நாகமலை தோகமலை தோகமலை
நாலெட்டடம் சூழ்ந்தமலை சூழ்ந்தமலை
தோகமலை தாண்டியல்லோ தாண்டியல்லோ
வருகுதுபார் கல்வாணி கல்வாணி
வீரமலை தேடியல்லோ தேடியல்லே
வெகு விரைவாய் வருகுதுபார் கல்வாணி"

---

கல்வாணி வீரமலை வந்து, பன்றி குத்திய இடத்தில் பார்வதியாளை இறக்கிவிட்டு, 'அம்மணி! இதுதான் பன்றியை கொன்ற இடம், அதோ! உங்களுடைய நாய், பொன்னுச்சி! கறிக்கு காவல் இருக்கிறாள், அவளுக்கு உன் அண்ணன்மார்கள் இருக்கும் இடம் தெரியும்;' என்று சொல்லி விட்டு, கல்வாணி விடை பெற்று நாகமலை போய்ச் சேர்ந்தது.

கல்வாணி சென்றதும், பார்வதியாள், பொன்னுச்சி அருகில் சென்று. 'அடி, பொன்னுச்சி! என், அண்ணமார்கள், எங்கே?'

668,

பார்வதி: பாட்டு

"அண்ணரு எங்கயம்மா
அடிசதிகாரப் பொன்னுச்சி.
அண்ணரைக் கொன்று விட்டு நீ
சேதி சொல்ல இருக்கிறியா,
சாமியைக் கொன்று விட்டு
நீ சதிகாரி இருக்கிறியா."

---

பொன்னுச்சி: அம்மா! என்னை இந்தக் களிக்கூடுகளுக்கு, காவல் இருக்கச் செய்து விட்டுப் போய் விட்டார்கள், நான், என்ன, செய்வேன்!

பார்வதி: பாட்டு
பொன்னுச்சி/நாம்,

"செத்த களம் தேடியல்லோ
தேன் மொழியாள் போவோமம்மா,
மாண்ட களம் தேடியல்லோ
மயிலினையாள் போவமம்மா,"

---

பொன்னுச்சி: அம்மா! இந்தக் களியை ஏதாவது வந்து, சாப்பிட்டு விடுமென்று, என்னைக் காவல் வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள், இதை விட்டு, நான் எப்படி வர முடியும்?

பார்வதி: சரி! நான், தெய்வசபையை நினைத்து, நாம் போய் விட்டு வரும் வரை,

இந்தக்கனியை எதுவும் வந்து சாப்பிடாமல் இருக்கச் செய்கிறேன், என்று, பார்வதியா மாயவரை நினைத்து, அப்படியே செய்தாள்.

பிறகு, பொன்னுச்சியைக் கூட்டிக் கொண்டு, அண்ணார்கள் இறந்த இடம் தேடி, புறப்பட்டாள்.

பாட்டு

"செத்தகளம் தேடியல்லோ, பொன்னுச்சி
தேன் மொழியைக் கூட்டிவாளே
மாண்டகளம் தேடியல்லோ பொன்னுச்சி
மலர்க்கிளியைக் கூட்டிவாளே"

---

இருவரும், வன்னிமரம் மட்டப்பாறை வந்து பார்க்கும் போது, அண்ணமார்கள், கத்தியில் புளியங்காய் தொங்குவது போல், தொங்குவதைக் கண்ட பார்வதியா, தீயில் விழுந்த புழுப் போல் துடித்து, ஓடிப்போய், அண்ணனை சுற்றி வருவாள், சுற்றி வருவாள், பக்கம் வருவாள், பறந்து வருவாள். ) 29/

பாட்டு

220 "தூங்கம் போல் கண்ணீரை அங்கு கண்ணீரை
தூரணியிலே பத்தினி வடித்தாளே இனி வடித்தாளே
முத்துப் போல் கண்ணீரை முகத்தோட சோர விட்டாள்
பவளம் போல் கண்ணீரை அன்னக்கொடி

670,

முன்பக்க பாட்டு

பக்கமெல்லாம் சோரவிட்டாள்"

பார்வதியா, அழுது கொண்டு ஓடிப்போய், பெரிய ண்ணசாமியை எடுத்து மடியில் வைத்து.

பாட்டு,,

பார்வதி: "பெரியண்ண சாமியே அய்யோ சாமியே, என்
பேசாதிரு மடியே ஐயோதிரு மடியே
வாய் பேசாத்துருமரே அய்யோ துருமரே. என்
மனைச்சாமி மடிந்திரோ ஐயோ மடிந்திரே
வீரமலைக்காட்டிலே சாமி காட்டிலே
வினைகாரன் சீமையிலே அண்ணே சீமையிலே
கள்ளன் எய்தானே அங்கு எய்தானே உங்களை
குருவேடன் ஜெயித்தானே அண்ணே ஜெயித்தானே
வேடன் கல்லோ எய்தானே அங்கு எய்தானே
உங்களை வில்வேடன் ஜெயித்தானே இங்கு ஜெயித்தானே
மார்பிலே பட்ட அம்பு அண்ணே பட்ட அம்பு
மடியெல்லாம் செஞ்சேறு ஐயோ செஞ்சேறு
தோளிலே பட்ட அம்பு அண்ணே பட்ட அம்பு
தொடையெல்லாம் செஞ்சேறு அண்ணே செஞ்சேறு"

பார்வதியா, பெரியண்ண சாமியை கீழே வைத்து விட்டு, சின்னண்ணசாமியை கத்தியிலிருந்து எடுத்து, மடியில் வைத்து, அழுதாள்.

671,

பார்வதி பாட்டு

"எட்டி பிடிக்கும் கை அண்ணா பிடிக்குங் கை,
எதிர்த்தவரை வெல்லுங்கை அண்ணா வெல்லுங் கை.
குத்தி பிடிக்குங்கை அண்ணா பிடிக்கும் கை
கனத்தவரை வெல்லுங் கை அண்ணா வெல்லுங் கை,
பத்தான பலமுடைய அண்ணா பலமுடைய
பாரமுள்ள வீரமெங்கே அண்ணா வீரமெங்கே,
எட்டான பலமுடைய அண்ணா பலமுடைய
இளைய குமாரசங்கு அண்ணா குமாரசங்கு,
மடியிலே அரிசிகட்டி அண்ணா அரிசிகட்டி
மயங்காமல் பெண் வளர்த்தீர் அண்ணா
பெண் வளர்த்தீர்.
மடிகனம் கனக்குதென்று அண்ணா கனக்குதென்று
வழியெங்கும் சிதறைவிட்டீர் அண்ணா சிதறைவிட்டீர்.
சிறகில் அரிசிகட்டி அண்ணா அரிசிகட்டி
சிணுங்காமல் பெண் வளர்த்தீர் அண்ணா பெண் வளர்த்தீர்,
சிறகு கனக்குதென்று அண்ணா கனக்குதென்று
சிந்திவிட்டீர் ஆழியிலே அண்ணா ஆழியிலே!) 292

---

293 (பார்வதியா சின்னண்ண சாமியை மடியில் வைத்து அழுது புலம்பிவிட்டு, பிறகு, அண்ணமார்கள் இருவரையும் மட்டப்பாறையில், மேற்கு தலையை வைத்து, கிழக்கு கால் நீட்டி, படுக்க வைத்துவிட்டு; சாம்புகனையும் எடுத்து அதே மாதிரி,

மட்டப்பாளையில் படுக்க வைத்து விட்டு, பார்வதியாள் வண்ணியாரு சென்று தலை முழுகி, மேட்டில் வந்து வடக்கு முகமாக மண்டியிட்டு உட்கார்ந்து,

'ஈஸ்வரா! நான் என், அண்ணமார்களை எழுப்பி, மூன்று நாழிகை நேரம் பேசுவதற்கு, பரமனுட பக்கலிலே பாசுபதமும் வரவேண்டும்! ஈசனுட அருளாலே எழுப்ப வரம் வேண்டும்! பொன்னாசி, பொன்சரக, பொருந்த வரம் தரவேண்டும்!' இப்படி, பார்வதியாள் ஈஸ்வரனை நினைத்து வேண்டும்போது,

ஈஸ்வரன் பார்த்து, உடனே பொன் பிரம்பை எடுத்து, பார்வதியாளின் கைக்கு போய்ச் சேரும்படி, அனுப்பினார்.

பொன் பிரம்பு, பூலோகம் வந்து, வீரமலையில் பார்வதியாள் பத்தினியின் கையில் போய் நின்றது.

பார்வதியாள் பிரம்பை எடுத்துக் கொண்டு, ஒரு சொம்பு தண்ணீரும் எடுத்துக் கொண்டு, வன்னிமரம் வந்து, அண்ணார் அருகில் உட்கார்ந்து, தீர்த்தத்தை அண்ணமார்கள் மேல் தெளித்து, பிறகு, தலைமாட்டில் வடக்கு முகமாக உட்கார்ந்து,

பார்வதி: தெய்வசுவையை நினைத்து, மாயவரை நினைத்து,

பாட்டு

'அண்ணா! உங்களுக்கு,

"சாதமொரு கிண்ணியிலே அண்ணா கிண்ணியிலே
துண்ணி ஒரு சொம்பிலே அண்ணா சொம்பிலே.
ஏலமொரு கிண்ணியிலே அண்ணா கிண்ணியிலே.
இளநீரும் சொம்பிலே அண்ணா சொம்பிலே."

---

வசனம்.

'அண்ணா! நீங்கள், சோறு குடித்து மௌனையாரி பேசுவதற்கு.
தண்ணி குடித்து தலையாரிப் பேசுவதற்கு.

பாட்டு

"பரமனுட பக்கலிலே அண்ணா பக்கலிலே
பாசுபதம் பெற்று வந்தேன்
அண்ணா பெற்று வந்தேன்
ஈசனுட பக்கலிலே அண்ணா பக்கலிலே
ஏகப்பவரம் வாங்கி வந்தேன்
அண்ணா வாங்கி வந்தேன்"

---

பார்வதியா, இப்படி அழுது கொண்டே எழுந்து, அண்ணமார்கள் இருவரையும், சாம்புகனையும், பொன் பிரம்பால் மூன்று முறை தட்டி விட்டு, 'இன்னண்ண சாமி எழுந்தாலும், வெட்டி விடுவார்' என்று, பார்வதியா ஓடிப்போய் வன்னிமரத்தின்

மறைவாக, ஒளிந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில், சாமி இருவருக்கும், காலாடி, கையாடி கண்ணயிரு வந்தது. சின்னண்ண சாமி திடீரென்று எழுந்து, சுற்றியும் பார்க்கும்போது, வன்னி மரத்தின் மறைவில் ஒளிந்திருக்கும், பார்வதியாளின் துயில் கொஞ்சம் தெரிந்தது கண்டு, சின்னண்ண சாமி 'இங்கு, யாரோ! பெண் வந்திருக்கிறாள்' என்று,

பாட்டு

"கத்தி கத்தி சுழட்டுறது
கார் மின்னல் என்சாமி மின்னுது பார்
ஈட்டி ஈட்டி சுழட்டுறது
எதிர் மின்னல் என்சாமி மின்னுது பார்"

சின்னண்ண சாமி கோபத்துடன் கத்தியை சுழட்டி வீசும் போது, பார்வதியா கத்தி வரு வேகத்தைக் கண்டு, தெய்வ சபையை நினைத்து, கத்திக்கு சிக்காமல் சிறிது மேலே சென்று விட்டாள். கத்தி வந்த வேகத்தில், ஒரு கல்லை வெட்டி விட்டு, சென்று விட்டது.

பிறகு, பார்வதியா ஓடி வந்து, அண்ணனிடம் சேர்ந்தாள்.

சாமி இருவரும், பார்வதியாளை வாரியெடுத்து
மணி முகத்தை முத்தமிட்டு,
கட்டியெடுத்து, கொள்ளை முத்தம் தந்தார்.

சி. சாமி. தங்கமே, பார்வதியா! எங்களைத் தேடி, இந்த
வீரமலைக்கு, எப்படித் தடங்கண்டு வந்தாய்?

பார்வதியாள். அண்ணா! நீங்கள் வைத்து விட்டு வந்த அடை
யாளமெல்லாம் மாறியது, பிறகு, நீங்கள் வீர
மலையில் இறந்து விட்டதாக, என்னுடைய
அண்ணியர்களிடம் சென்று, நாம் போய் அண்
ணார்களை பார்த்து, எடுத்து, அடக்கம் செய்து
விட்டு வருவோமென்று கூப்பிட்டேன்!
அவர்கள், நாங்கள் வரமுடியாது! நீ வேண்டு
மானால், உன் அண்ணார்களைத் தேடிப் போ!
என்று, வர மறுத்து விட்டார்கள்; பிறகு,
நான், அவர்கள் மாளிகையுடன் அவர்களை,
அக்கினியால் எரித்து, அவர்களுக்கு
கருமாதிச் சீர் செய்து விட்டு, உங்களை
தேடிக் கொண்டு மதுக்கார வனத்தில்
வரும் போது, அங்கு ஒரு நாகேந்திரன்
என்னைப்பார்த்து, என்னை தன்னுடைய
லோகத்தில் வைத்து, வெய்யல் அடியாமல்,

குகை பிளந்து, நாகமலையில், அருக்கண்ட
மாதா தவசு செய்யும் இடத்தில் கொண்டு
வந்து, விட்டு விட்டுப் போய், விட்டது.
அப்போது, மாயவர் அங்கு வந்து, அருக்
கண்ட மாதாவை, சிறிது நேரம் கீழே இறங்
கச் சொல்லி, என்னை தவசு நிலையில் ஏறி,
உங்களை எழுப்பி, சிறிது நேரம் பேசுவதற்
கு, ஈ. ஸ்வரனிடம் வரம் வாங்கச் சொன்னார்.
நான், அதன் பிரகாரம் தவசு செய்து, வரம்
வாங்கிக் கொண்டு கீழே வந்து, அருக்கண்ட
மாதாவிடம், பசிக்கு சாதமும், தண்ணீரும்,
கேட்டேன். மாதா அப்படியே கொடுத்து,
~~அருக்கண்ட மாதா~~ தன்னுடைய கல்வாணிப்
பறவையை அழைத்து, என்னைக் கொண்டுபோய்
வீரமலையில் விட்டு விடும்படி சொன்னார்கள்.
உடனே, கல்வாணி என்னைக் கொண்டு வந்து
பன்றிகுத்திய இடத்தில் விட்டுச் சென்றது.
அங்கு, பொன்னுச்சியைக் கண்டு, கூட்டிக்
கொண்டு, நீங்கள் இறந்த இடம் தேடி, வந்
தேன்.
அண்ணா! இப்போது, உங்களுக்கு உயிர்

கொடுத்து, எழுப்பிவிட்டேன், அல்லவா!
இனி, வாருங்கள்! நம் ஊருக்குப் போகலாம்!
என்றதும்.

சி.சாமி! தங்கமே! கவரிமான் என்பது, தன் உடலி
லிருந்து, ஒரு மயிர் உதிர்ந்தாலும், அது,
பூமியில், வாழாது! அப்படி நம்
(பி)
பிண்ணப்படாமேனி பிண்ணப்பட்டுப் போச்சு,
காயம்படாமேனி காயம் பட்டுப் போச்சு,
குத்துப்படாமேனி குத்துப்பட்டுப் போச்சு,
மாயவர், நம்மளுக்கு வயது மதிருது, வாலிபம்
தொண்ணூறு சரியாக முடிந்தது என்று, நான்
வேடுபடைகளையெல்லாம் கொன்று விட்டு,
நானும், சாம்புகனும், வாணியாற்றுக்கு வந்து,
கத்தி கழுவும் போது, மாயவர், என்ன)

பாட்டு 294

45 "வாழைத்தண்டை வில் வளைத்து
மல்லிகைப்பூ கணை தொடுத்து
சோளத்தண்டை வில் வளைத்து
சுருளிப்பூ கணை தொடுத்து
பொல்லாத மாயவர் என்னை
போட்டாரே அம்பாலே
அம்புச் சிறைக்கு வந்து என்
வெண்ணுதலை அத்துதம்மா"

'அம்மா, தங்கமே! வென்றால் அந்த பிறகு,
நாம் உயிரை வைத்திருக்கக் கூடாது
என்று, பாறையில் கத்தியை ஊன்றி, அதில்
விழுந்து, உயிரை விட்டோம்;
தங்கமே!
செத்தவர் எழுந்தால், சீமை இடம் கொள்ளாது.
மாண்டவர் எழுந்தால், வையகம் கொள்ளாது.
நாமலே, இந்த நாட்டை ஆண்டு கொண்டி
ருந்தால்; இனிமேல் வருபவர்கள் எப்படி
ஆளுவது? ஆகையால், இனி இந்த வீர
மலைதான், நம்மளுக்கு உத்தர பூமி; அம்மணி!
நீ, எங்களுக்கு செய்ய வேண்டிய, சீர்களை,
இங்கு, செய்து விடு! என்றதும்.

பார்வதி: 'அண்ணா! இந்த வீரமலையில் நீங்கள் இருந்
தால், இங்கு, காட்டானை, மிருக ஜாதிகள்
இருப்பதால்; இங்கு யாரும் வந்து உங்களுக்கு
பூஜை, செய்ய மாட்டார்கள்! ஆகையால்,
உங்களை, வீரப்பூரில் இரண்டு மண்டபம்
கட்டி, அங்கு உங்களை வைத்து விடு
கிறேன்! வாருங்கள்' என்று; அண்ணார்கள்
இருவரையும், சாம்புகன், பொன்னுத்தி,

எல்லோரையும் கூட்டிக் கொண்டு, வீரப்பூர் சென்றாள்.

அங்கு சென்று, பார்வதியா தெய்வசவையை நினைத்து, மாயவரை நினைத்து, 'மாயவா! நுங்களுடைய கிருபையால், என் அண்ணா மார்களுக்கு இரண்டு மண்டபங்கள் ஆக வேண்டும், காஞ்சிநாதா!' என்றதும்.

மாயவர் கிருபையில், அழகான, இரண்டு மண்டபங்கள், உண்டாகியது. பிறகு, பார்வதியா மாயவரை நினைத்து, 'அண்ணனுக்கு, தேர் ஒன்று வேண்டு'மென்றாள். அதன் பிரகாரம், தேர் உண்டாகியது.

பிறகு, பார்வதியா, அண்ணா மார்கள் இருவரையும், தேரின் மேல் வைத்து ஊர்வலம் வரும் போது.

திடீரென்று, அந்தரமாக ஒரு வேட்டு தெய்வலோகம் நடுங்கும் படி, எழுந்தது. அப்போது, அங்கு, ஒரு வேட்டுவன் துள்ளி விழுந்து, செத்தான்.

பிறகு, தேர் ஊர்வலம் வந்து, நிலை நின்ற
பின், பார்வதியா, அண்ணார் இருவரையும்
கூட்டிச் சென்று; பெரியண்ணசாமியை,
வலது புற மண்டபத்தில் கிழக்கு
முகமாக வைத்து, சின்னண்ண சாமி
யை, தென்புற மண்டபத்தில் கிழக்கு
முகமாக வைத்து, சின்னண்ண சாமி
கோபக்காரர். ஆதலால், யாரும் எதிர்
நின்று ஆறை செய்ய முடியாதானகையால்,
அவர் முன் ஒரு பெரிய கல்லை நிறுத்தி, கல்லுக்
கு அந்தப்புறமிருந்து, ஆறை செய்யும்படி
ஏற்பாடு செய்து, கல்லுக்கு அந்தப்
புறம், தூரத்தில் சாம்புகனையும், பொன்னு
ச்சியையும் நிறுத்தி (மேற்கு முகமாக)
சாம்புகனுக்கு, குடம், கொம்பு,
ஆகியவைகள் தோளில் போட்டு, மேற்கு
முகமாக நிறுத்திவிட்டு; பிறகு, பார்வதியா
ஏமனை அழைத்து, நான்கு பேர்கள் உயிர்
உ(களையும் பிடிக்கச் சொன்னான்.) 295
(ஏமன், உயிர்களை பிடித்துச் சென்றபின்,

பார்வதியா, அண்ணமார்களுக்கு பூஜை
ஆரம்பம் செய்தாள்.

பாட்டு,,

"கிணி கிணியென்று சொல்மணி அடிப்பாள்
கீழிருந்து சொம்புத்தண்ணி மேலே தெளிப்பாள்
பாலால் அபிஷேகம் தேனால் அபிஷேகம்
பன்னீர் அபிஷேகம் விளாம் அபிஷேகம்
பதினெட்டு அபிஷேகம் பாங்குடனே நடக்குதப்பா
கிணி கிணியென்று ஒரு மணியடிப்பாள்
கீழிருந்து சொம்புத்தண்ணி மேலே தெளிப்பாள்"

---

பார்வதியா, இப்படி, அண்ணமார்களுக்கு அருபூஜை, குருபூஜை, 58. லிங்கம் பூஜையும் சரியாக முடித்தாள்.

அப்போது, ஈஸ்வரன் பார்த்து, 'பார்வதியா! அண்ணமார்களுக்கு, எல்லாக் காரியமும் முடித்து விட்டாள், அவளை, இனி தெய்வ சபைக்கு கொண்டு வரவேண்டுமென்று, புஷ்ப பல்லக்கை பூலோகத்திற்கு அனுப்பினார். பல்லக்கு கீழே வந்ததும், பார்வதியா அதில் ஏறி, தெய்வலோகம் போய்ச் சேர்ந்தாள்.

(கதை முற்றும்)

# மங்களம்.

ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு ஜெய மங்களம்
ரவி குல சோமனுக்கு சுப மங்களம்
ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு ஜெய மங்களம்
ரவி குல ராமனுக்கு சுப மங்களம்
மாராபி ராமனுக்கு மன்னு பரந்தாமனுக்கு
ஜெய மங்களம் நல்ல சுபமங்களம்
ராஜா ராமனுக்கு ஜெய மங்களம்
ரவி குல சோமனுக்கு சுப மங்களம்
ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு ஜெய மங்களம்
ரவி குல சோமனுக்கு சுப மங்களம்.

---

பூமி பாலகராகிய, குன்னுடையாக் கவுண்டரின்
கதையை, படித்தவரும், படிக்க வைத்தவரும்,
காதால் கேட்டவரும்,
என்றும் கனக சபை, எப்போதும் தெய்வ சபை
போல் இருந்து,
வற்றாத சிற்றூற்று, வடியாத பால் கிணறு போல்,
எந்நேரக் காலமும் அவர்கள்
இருந்து பட்டம் ஆள வேண்டும்.
ஆல் போல் தழைத்து, அருகு போல்
வேரூன்றி,
மூங்கில் போல் சுற்றம், முசியாமல் வாழி!
(சுபம்)